# தவ்வை என்னும் தமிழரின் தாய் தெய்வம்



**இ. மதன் & முனைவர். சு. இளமாறன்.**
**தமிழாய்வுமையம்,**
**இலக்குமிபுரம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி.**
**நெய்யுர் – 6298025, கன்னியாகுமரி மாவட்டம்.**

**ஆய்வுச் சுருக்கம்**

தவ்வை என்ற தமிழரின் மூத்த தாய் தெய்வம் பற்றிய வரலாற்றுச் செய்திகளையும், புராண செய்திகளையும், இவ்வளமை தெய்வம் குறித்த அடையாளங்களையும் சடங்கு முறைகள் பற்றியும் கூறப்பட்டுள்ளது. மேலும் இந்த மூத்த தாய் தெய்வத்தை யார் எங்கு வணங்குகிறார்கள் என்றும் தமிழகத்தில் தவ்வை கோவில்கள் எங்கு உள்ளது என்றும் வண்ணர்களுக்கும் தவ்வைக்கும் உள்ள வரலாறு குறித்தும் இவ்வாய்வு கட்டுரை திரிபு இல்லாது தெளிவாக எடுத்துரைக்கிறது.

**திறவுச்சொற்கள்**

**தவ்வை, மூதாதையர், அக்கை, ஜ்யேஷ்டா, சேர்குழி, தூமாவதி, காலச்சுவடி.**

**முன்னுரை**

இறைவன் தூணிலும் இருப்பான் துரும்பிலும் இருப்பான் என்பது ஆன்றோர் வாக்கு. ஆனால் இறைவன் இயற்கையில் தான் இருக்கிறான் என்பது சங்ககால தமிழனின் சத்தியவாக்கு. தமிழன் என்றாலே இந்துக்கள் என்ற போலிச்சாயம் இன்று இருக்கும் நிலையில் சங்ககால தமிழர்கள் இயற்கையைதான் இறைவனாக வணங்கினார்கள். உலகின் மூத்த நாகரீகமாக விளங்கும் தமிழ்ச்சமூகத்தில் தமிழரின் முதல் தெய்வம் எது? என்ற கேள்விக்கு மிகப்பெரிய பதிலை பூமிக்கடியில் இயற்கை புதைத்து வைத்துள்ளது. தோண்ட தோண்ட கிடைக்கும் ஒவ்வொரு சிலையையும் இதுதான் முதல் கடவுளாய் இருக்குமோ? என்ற கேள்வி தமிழரின் மனதில் அதிகமாகியுள்ளது. இக்கேள்விக்கு விடையறியும் முன் தமிழர்களின் மூத்த கடவுளை நாம் மறந்து விட்டோம் என்ற குறுகிய வட்டத்திற்குள் வருவோம்.

**தமிழரின் மூத்த தெய்வம்**

தமிழரின் மூத்த தெய்வம், மூத்த கடவுள், மூத்த தாய் தவ்வை என்று அழைக்கப்படும் ‘மூதேவி’. இத்தெய்வத்திற்கு அமங்கலமானவள், எதற்கும் உதவாதவள், சோம்பேறி என்று மூதேவி என்னும் பெயருக்கு தவறான பொருளை அளித்தவர்கள் யார் என்று தெரியவில்லை. தமிழர்களின் பெருமையைதான் மறைக்கிறார்கள் என்று பார்த்தால் தமிழர்களின் தாய் தெய்வத்தையும் தவறாக குலைத்து வைத்திருக்கிறார்கள் சில மூடர்கள். மூதேவி என்றால் மூத்ததேவி. நம் முது தந்தையரை எவ்வாறு மூதாதையர் என்று அழைக்கிறோமோ அப்படிதான் மூத்த தேவிக்கும் மூதேவி என்று பெயராகியது.



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

அக்காவை குறிக்கும் சொல் அக்கை என்பது எப்படி தமக்கை ஆனதோ அவ்வாறு அவ்வை என்ற சொல் தவ்வை ஆகியிருக்கலாம் என்கிறார்கள் வரலாற்றாசிரியர்கள்.

அப்படியானால் தவ்வை யாருக்கு அக்கா? என்ற கேள்வி பிறக்கும். செல்வத்தின் அதிபதியாக திகழும் கலைமகளுக்கு தான் இவள் தவ்வை. சங்க இலக்கியங்களில் மாமுகடி, தவ்வை, காக்கை கொடியோள், பழையோள், சேட்டை, கேட்டை உட்பட பதினான்கு பெயர்களால் அழைக்கப்படுகிறாள் இந்த மூதேவி.

**தாய் தெய்வம் குறித்த வரலாற்றுச் செய்திகள்**

தெற்கின் பெரும்பகுதியை பல்லவர்கள் ஆட்சி செய்த எட்டாம் நூற்றாண்டில் தமிழர்களின் தாய் தெய்வமாய் மூதேவி இருந்துள்ளாள். நந்திவர்ம பல்லவனுக்கு இவளே குலதெய்வம். பல்லவர்கள் காலத்தில் காட்டிலும் பிற்கால சோழர்கள் காலத்தில் சேட்டை வழிபாடு சிறப்பாக இருந்ததாக கல்வெட்டுகள் கூறுகின்றன. சமணர்கள் கூட தவ்வையை வழிபட்டுள்ளனர்.

**“ வேதாளம் சேருமே வெள்ளெருக்குப் பூக்குமே**
**பாதாள மூலி படருமே - மூதேவி**
**சென்றிருந்து வாழ்வளே சேடன் குடிபுகுமே**
**மன்றோரம் சொன்னார் மனை ”** [1]

**“ மடியுளான மாமுகடி என்ப மடியிலான**
**தாளுளான் தாமரையி னாள் ”** [2]

போன்ற சான்றுகள் மூதேவியின் பழமையைக் குறிக்கின்றன. உரத்தின் அடையாளம் தவ்வை. நெற்கதிரின் அடையாளம் திருமகள். நெற்கதிர்கள் செழித்து வளர வேண்டும் என்றால் உரம் மிகவும் அவசியம். இங்கு உரமாய் திகழ்பவள் தவ்வை. அதன் காரணமாகவே பெரும்பாலான தவ்வை சிற்பங்கள் வயல்வெளிகளை ஒட்டியே கிடைத்துள்ளன. சில ஆண்டுகளுக்கு முன்பு கன்னியாகுமரி மாவட்டத்தில் கிடைத்த தவ்வை சிற்பங்களே அதற்கு சரியான சான்று.

**தவ்வை பற்றிய புராணச் செய்தி**

தவ்வை பற்றிய ஆயிரம் சான்றுகள் இருந்தாலும் புராணச் செய்தி சொன்னால்தான் ஏற்றுக்கொள்வர். ( பாற்கடல் கடைந்த கதை ) துருவாசர் சாபத்திலிருந்து கதை தொடங்குகிறது. அசுரகுல ஆதிக்கம் அதிகரிக்கிறது. இந்திரனும் தேவர்களும் விஷ்ணுவிடம் முறையிடுகிறார்கள். விஷ்ணு சிவபெருமானிடம் முறையிட கூறுகிறார். இக்கலகத்திற்கு ஒரே வழி பாற்கடலை கடைவதுதான் என்று கூறுகிறார். தயிரை மத்து கொண்டு கடைவது போல மேரு மலையினை மத்தாகக் கொண்டு சிவபெருமான் கழுத்தில் இருக்கும் வாசுகி என்ற பாம்பை நாணாக கொண்டு பாற்கடலை ஒருபுறம் தேவர்களும் மறுபுறம் அசுரர்களும் கடைகின்றனர். இவ்வாறு கடையும்போது முதலில் மூத்ததேவி பிறக்கிறாள் என்பதே புராணம் கூறும் கதையின் சுருக்கமாகும்.

**தவ்வை எனும் வளமை தெய்வம்**

தவ்வையின் சிலை எவ்வாறு சிறப்பு இலக்கணத்துடன் இருக்க வேண்டுமென்று ஆகமங்களும் கூறுகின்றன. இதுவரை கிடைத்த தவ்வை சிற்பங்கள் எல்லாம் செழித்த மார்புடனும் பருத்த வயிறுடனும் தான் கிடைத்துள்ளன. இதுவே அவள் வளமை தெய்வம் என்பதற்கு ஆகச்சிறந்த சான்று. தமிழ் நிகண்டுகளில் தவ்வை, சேட்டை, மாமுகடி, மூத்த தேவி, பழையோள் என்று பதினான்கு பெயர்களால் குறிக்கப்படும் இத்தெய்வத்தை வைணவ அடியார்களில் ஒருவர் குறிப்பிடுகிறார்.

**" கேட்டிரே நம்பிமீர்காள் கெருட வாகனனும் நிற்க**
**சேட்டை தன் மடியகத்துச் செல்வம் பார்த்திருக்கின்றீரே "** [3]

என பாடுவதில் இருந்து வளமை வேண்டி தமிழர்கள் வழிபட்ட முக்கியமான தெய்வம் என்பதை சந்தேகத்திற்கு இடமின்றி அறிந்து கொள்ள முடிகிறது. ' மடியகத்து செல்வம் ' என்பது சாக்த மார்க்கத்தின் யோனி வழிபாட்டினை குறிக்கிறது. பருத்த வயிறு மார்பகங்களுடன் பெண் தெய்வங்கள் பழங்காலம் தொட்டே வழிபடப்படுகின்றனர். இவை பிறப்பு உயிர்களை படைத்தல் ஆகியவற்றை உணர்த்தும் குறியீடுகளாகும்.

**தவ்வையின் அடையாளங்கள்**

துடைப்பம், காக்கை கொடி, கழுதை வாகனம் இதுவே தவ்வையின் அடையாளமாக இருந்துள்ளன. இவை அனைத்தும் அழுக்கின் அடையாளமாகவே உள்ளது. மேலும் தவ்வை சிலைகளில் வலதுபுறம் மாடு போன்ற சிற்பமும் இடதுபுறம் பெண் ஒருவள் தண்ணீர் குடம் வைத்துள்ளது போன்ற தோற்றமும் உள்ளது. மாடு என்பதும் தண்ணீர் என்பதும் விவசாயத்திற்கு அவசியமான ஒன்று. எனவே இவள் விவசாயத்தின் தெய்வம் என்ற கூற்றும் உள்ளது.

" அழுக்கின் தெய்வமாக இப்போது கருதப்படும் மூதேவியே வளமையின் மூலத்தெய்வமாக இருந்துள்ளது. பயிர்களும் உயிர்களுமாகிய செல்வங்களின் மூல வடிவம் உரமாகும். உரத்தின் மூல வடிவம் அழுக்காகும். மனிதர்கள் உள்ளிட்ட உயிரினங்கள் மற்றும் தாவரங்கள் ஆகியவற்றின் கழிவுகளே அழுக்கு என்ற பெயரால் சுட்டப்படுகின்றன. அழுக்கு என்ற சொல் அழுக செய்வது என்ற பொருளையே உணர்த்துவதாகும். எனவே பயிர் வளர்ச்சியினை அடையாளப்படுத்தும் திருலட்சுமியினைத் தங்கையாக்கி, அதற்குரிய மூலவளம் சேர்க்கும் உரத்தின் தெய்வத்தை தமக்கையாக ( மூத்ததேவி ) மூதேவி என்று அடையாளப்படுத்துகின்றனர்." [4]

**மழைச் செம்புச் சடங்கும் மூதேவி வழிபாடும்**

குப்பைகளை சேகரிக்கும் துடைப்பம். அழுக்குகளை சுமக்கும் கழுதை, எஞ்சியவற்றை உண்டு துப்புரவு பணி செய்யும் காக்கை ஆகியவை அழுக்குகளை உரமாக்கும் இயற்கையின் சக்திகளாக கொள்ளலாம். விவசாயம் செழித்து வளம் பெற மழைச் செம்பு சடங்குகள் செய்து தவ்வையை வழிபடும் மரபு தமிழர்களிடம் இருந்துள்ளது. உரக்குழிகளை வணங்கும் வழக்கமும் தமிழர்களிடையே இருந்துள்ளது.

" உரம் பயிராகும் கால இடைவெளியே தமக்கைக்கும் தங்கைக்கும் மூத்ததேவிக்கும் இளையதேவி லட்சுமிக்கும் இடையிலுள்ள வேறுபாடாகும். கார்த்திகைத் திருவிழாக்களின் போது உரக்குழி அல்லது சேர்குழி எனப்படும் குப்பைக் கிடங்குகளில் அகல்விளக்குகளை ஏற்றி அதனை 'குப்பை நாச்சியார்' என்ற பெயரில் வழிபடுகின்றனர்."[5]

**தமிழகமும் தவ்வை கோவில்களும்**

தவ்வையை மூலவராக கொண்ட கோவில்கள் தமிழ்நாட்டில் இல்லை. தவ்வை தனியாகவோ அல்லது மகன் மற்றும் மகள் என்று சொல்லப்படுகின்ற இரண்டு சிற்பங்களுடன் சேர்ந்து ஒரே இடத்திலோ அமைந்திருக்கும் சிலைகளாக உள்ளது. சில இடங்களில் தவ்வை கோவில்களில் அல்லாமல் விவசாய நிலங்களின் மத்தியில் காணப்படுகிறாள். அவ்வாறாக திருவாரூர் தியாகராஜர் கோவிலில் உள்ள கமலமுனி சித்தர் பீடம் நுழைவு வாயிலில் தவ்வை சிலை அமைந்துள்ளது. நாகை மாவட்டம் வழுவூரில் உள்ள வீரட்டேசுவரர் கோவில் மேற்கு திருசுற்றில் உள்ள மேடையில் தவ்வை உருவம் வைக்கப்பட்டுள்ளது. இக்கோவிலில் இரண்டு சிற்பங்களுடன் சேர்ந்தே காட்சி அளிக்கிறாள். திருக்கொண்டீச்வரம் பசுபதீசுரர் கோவிலில் தவ்வை இடம்பெறுகிறாள். இத்தளத்தில் இவள் அனுகிரக தேவதையாக உள்ளாள். திருச்சியில் உள்ள திருவானைக்காவல் அகிலாண்டேஸ்வரி கோவிலிலும் தவ்வை சிலை உள்ளது. காஞ்சி கைலாசநாதர் கோயிலிலும், கும்பகோணம் கும்பேஸ்வரர் கோவிலிலும், மங்களாம்பிகை சன்னதிக்கு வடமேற்கிலும், வெடால் ஆண்டவர் திருக்கோவில் தென்புறத்திலும் தவ்வை சிற்பம் நல்ல கட்டமைப்புடன் கூடிய இடத்தில் உள்ளது. திருச்சி மாவட்டம் உய்யக்கொண்டான் மலை உச்சீவநாதர் கோவிலிலும், கடலூர் மாவட்டம் ஒரையூர் சிவன் கோவிலிலும், குளித்தலை கடம்பவன நாதர் கோவிலிலும் தவ்வை சிற்பங்கள் உள்ளன. சேலம் சுகவனேசுவரர் கோவிலில் தவ்வை சிற்பம் தனி கல்லில் வைக்கப்பட்டுள்ளது. மோகனூர் அசலதீபேசுவரர் கோவிலிலும், திருமுக்கூடலூர் அகத்தீசுவரர் கோவிலிலும், ஸ்ரீராம சமுத்திரம் வாலீசுவரர் கோவிலிலும், பெரணமல்லூர் திருக்கரேசுவரர் கோவிலிலும் தவ்வையின் சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. தனி கோவிலாக இல்லாவிட்டாலும் வளமை தெய்வம் என்பதற்கு அடிப்படையாக சிறப்பான சிற்பங்களாகவே இன்றளவும் உள்ளன.

**தவ்வையும் வண்ணார்களும்**

வலங்கையில் இருந்த சாதிப் பிரிவுகள் வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட பணிகளை மேற்கொண்ட சாதிகளாகவும் அதே தருணத்தில் இடங்கை சாதிப்பிரிவுகளானது வேளாண்மை சாராத தொழிலாளர்கள், நெசவாளர்கள் போன்ற கைவினை உற்பத்தித் தொழிலை செய்யும் சாதிகளாக இருந்தது. சோழர்கள் காலக்கட்டத்தில் பின்பற்றப்பட்ட இடங்கை வலங்கை சாதி வரலாற்றில் வலங்கைக்கு உரிய வண்ணார்கள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

“ **கய்வனவாளும் புலிக்கொடியும்**
**அல்லித்தாரும்**
**அடையாளம் உடையவர்கள்** ” [6]

- வலங்கை வரலாறு

“ **வளைந்த கத்தியுடன்**
**தாமரை மாலையுடன்**
**வெள்ளை யானையுடன் வலம்**
**வருவார்கள்** ” [7]

என்று தமிழக வண்ணார்களை பற்றி பரதவர்ஷத்தின் வரலாறுகளில் கூறப்பட்டுள்ளது.

வண்ணார்கள் என்றழைக்கப்படும் சலவை தொழிலாளர்கள் **ஏகவேணி** என்ற பெயரில் தவ்வையை வணங்கியுள்ளார்கள். இந்த வண்ணார் இன மக்களின் முக்கிய தொழில் சார்ந்த விலங்கு கழுதையாகும். பல கால்நடைகள் தமிழகத்தில் இருக்கும்போது கழுதையை மட்டும் தான் தமிழன் அதிர்ஷ்டத்தின் அடையாளமாக பார்த்தான். சுமைதூக்கும் கழுதை படத்தை சுவரில் மாட்டி **' என்னை பார் யோகம் வரும் '** என்று சொல்ல காரணம் என்னவென்று சற்று சிந்திக்க வேண்டும். சகிப்பு தன்மைக்கு அடையாளமாய் விளங்குவது கழுதை. கழுதைகளுக்கு பாரத்தை தாக்குபிடிக்கும் திறன் அதிகம். எனவே தான் கரடுமுரடான பகுதிகளில் அதிக பாரம் தூக்கி செல்ல இது பயன்பட்டது. அதே சமயத்தில் கழுதையின் பால் பல மருத்துவ குணங்களைக் கொண்டது. இவ்வண்ணார்களின் வாழ்வியலோடு கழுதை பின்னிபிணைந்துள்ளதால் தவ்வைக்கு கழுதை வாகனம் அமையபெற்றுள்ளது என்ற கூற்றும் உண்டு. அனுதினமும் அழுக்கு துணிகளுடன் போராடும் இம்மக்கள் நம் மன அழுக்குகளை நீக்கி நல்ல ஆரோக்கியமாக வளமை தெய்வமான தவ்வை நம்மை வாழ வைப்பாள் என்று நம்பினார்கள். அம்மக்கள்தான் தமிழர்களின் மூத்த தாய் தெய்வத்தை பெரிதும் வணங்கினார்கள் என்பதற்கு கல்வெட்டு ஆதாரங்களும் உள்ளன.

**முடிவுரை**

பண்டைய தமிழர்கள் தவ்வையின் தோற்றத்தை அறிவு சார்ந்து உருவாக்கியிருந்தனர். நாளடைவில் தோற்றத்தை மட்டும் வைத்து தவ்வையை இழிவாக ஒரு சிலர் ஆக்கிவிட்டார்கள். இவ்வளவு வரலாற்றுப் பெருமையும் அறிவியலையும் கொண்ட இந்த மூத்ததேவி இன்று நாம் திட்டும் வார்த்தையாக மூதேவியாக மாறிப் போனாள். ஆதிகாலத்தில் உழைப்பவன் இடத்திலேயே செல்வம் இருந்தது ஆனால் இன்று உழைப்பவனை காட்டிலும் முதலாளியின் இடத்திலேயே செல்வம் அதிகம் உள்ளது. உணவிற்காக வாழ்ந்த மனிதன் என்று பணத்திற்காக வாழ ஆரம்பித்தானோ அன்றே மனிதன் தெய்வமானான் தெய்வம் திட்டும் வார்த்தையானது. இயற்கையில் தெய்வத்தை வணங்கியவன் என்று ஒரு அழகிய சிலையில் தான் கடவுள் உள்ளது என்று நம்பினானோ அப்போதே தவ்வை அமங்கலத்தின் அடையாளம் ஆகிப் போனாள். அழகு இருக்கும் இடத்தில் தான் செல்வம் இருக்கும் என்ற மாயத் தோற்றத்தில் அதற்கு ஆதாரமான அடையாளத்தை தமிழன் மறந்து போனான். ஐந்து கோபுரங்களின் மத்தியில் கருவறையில் இருப்பவரும் தெய்வம்தான் வயல்வெளிகளில் வெட்ட வெளியில் இருப்பவரும் தெய்வம்தான். நம்பிக்கை ஒன்று தான். உருவங்களும் எண்ணங்களுமே இங்கு வேறுபடுகிறது. காலங்கள் மாறினாலும் அதன் கால சுவடிகள் மாறுவதில்லை. இனியாவது ஜேஷ்டா தேவி என்ற வடமொழியை பயன்படுத்தாமல் தவ்வை என்ற அழகிய தமிழ் பெயரில் நம் மூத்த தேவியை வணங்குவோம்.

**அடிக்குறிப்புகள்**

1. ஔவையார், நல்வழி, பா.21
2. பொருட்பால், திருக்குறள், பா. 617
3. தொண்டரடிப்பொடியாழ்வார், திருவாய்மொழி, பா. 8
4. பரமசிவம். தொ, மானிடவியல் ஆய்வு, பக். 56
5. மேலது, பக். 57
6. வலங்கை வரலாறு
7. பரதவர்ஷ வரலாறு